## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : விக்னேஷ்குமார் | Calling | : |
| Father/Husband's Name | : செல்வராஜ் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 31th October 2025.

1ம் எதிரி ஆஜரில் உள்ளார். 2ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரது தரப்பு வழக்கறிஞர் வழக்கு சம்பந்தமாக தமக்கு எந்த விபரமும் 2ம் எதிரி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டது பதிவு செய்யப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் ஈரோடு சத்தியமூர்த்தி வீதியில் குடியிருந்து கொண்டு தற்போது அருண் மருத்துவமனையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம் ஈரோடு VVCR நகரில் உள்ள ரேசன்கடையில் தற்காலிக விற்பனையாளராக பணிபுரிந்தேன். கடந்த 29.03.2022 ம் தேதி நானும் எனது நண்பரும் எபினேசரும் திருச்செங்கோடு செல்வதற்காக சின்னியம் பாளையத்தில் எபினேசரின் வீட்டிற்கு சென்று அவரை அழைத்து கொண்டு அவருடைய இருசக்கர வாகனத்தில் பரிசல்துறை நால்ரோடு வழியாக இரயில்வே கேட் அருகில் மதியம் 12.00 மணிக்கு வந்தபோது மொடக்குறிச்சி காவல்ஆய்வாளர் அங்கு நின்று வாகனத்தின் ஆவணங்களை பரிசோதனை செய்து கொண்டிருந்தார்கள்.

2. எங்களையும் நிறுத்தி எங்களுடைய வாகனத்தின் ஆவணங்களையும் கேட்டார்கள். அந்த இடத்தில் 4,5 வண்டிகளை விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது மஞ்சள் நிறமுடைய டியோ இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் வந்தார். போலீஸார் வாகன ஆய்வு செய்வதை பார்த்து அவருடைய வாகனத்தை திருப்ப

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.31 17:50:42 +0530

முயன்றார். அப்போது அங்கிருந்த போலீஸார் அவரை பிடித்து அழைத்து வந்து விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக அந்த நபர் பதில் சொன்னார். பின்னர் அவர் பெயர் நாகராஜ் என்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் சொன்னார். போலீஸார் விசாரித்த போது நானும் எனது நண்பர் பாரதிசெல்வம் என்பவரும் சேர்ந்து 19 ரோட்டில் சாய்பாபா கோவில் அருகில் ஒரு பெண்மணியிடம் நகையை பறித்ததை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்னர் ஆஜர் எதிரி அவருடைய மஞ்சள் கலர் டியோ வாகனத்தை போலீஸாரிடம் ஆஜர் செய்தார். அந்த வாகனத்தில் தான் இருவரும் சென்று நகையை பறித்ததாக ஒப்புக்கொண்டும், என்னை கூட்டி சென்றால் நாங்கள் பறித்த நகையை ஈரோடு சூரம்பட்டியில் உள்ள மணப்புரம் கோல்டு பைனான்ஸ்-ல் அடகு வைத்த நகையை அடையாளம் காட்டுவதாக வாக்குமூலம் கொடுத்தார்.

3. அதை காவல்ஆய்வாளர் தன்னுடைய லேப் டாப்பில் பதிவு செய்தார். அதனை பிரின்ட் எடுத்து ஆஜர் எதிரியிடமும் எங்களிடமும் கையொப்பம் வாங்கினார். ஆஜர் எதிரி தான் அந்த இடத்தில் போலீஸார் விசாரித்த நபர் ஆவார். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் **"என்னை கூட்டி சென்றால் ..... இரட்டைவடை செயினை அடையாளம் காட்டுவேன்" என்று அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. ஆஜர் எதிரி தன்னுடைய வண்டியை ஒப்படைத்தற்காக எங்களிடம் மற்றொரு கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி வண்டியின் பதிவு எண். TN 69 1300 ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மாலை 4.30 மணி வரை அங்கு இருந்தோம். பின்பு போலீஸார் எங்களையும், ஆஜர் எதிரியையும் சூரம்பட்டி மணப்புரம் பைனான்ஸ்-க்கு மாலை 5.00 மணி முதல் 5.30 மணிக்குள் அழைத்து சென்றார்கள். அங்கிருந்த மேலாளரிடம் காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் ஆஜர் செய்த அங்கிருந்த இரட்டைவடை செயினை ஆஜர் எதிரி அடைாளம் காட்டினார். அதை போலீஸார் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் வாங்கினார்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.31 17:50:51 +0530

5. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எனக்கு என் முன்னினையில் கைப்பற்றிய இரட்டை வடை செயினையும், வாகனத்தையும் பார்த்தால் அடையாம் சொல்ல முடியும். மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட நீதிமன்றத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ள மஞ்சள் நிறமுடைய டியோ வாகனம் தான் ஆகும். அது அ.சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி ஆஜர். போதிய வாய்ப்பு கொடுத்தும் அவரது தரப்பிற்கு வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.31 17:50:58 +0530